அவர்களும் அந்த இடத்தை பார்த்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. உடனடியாக அதற்குண்டான நடவடிக்கை எடுத்து பஸ் நிலையம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பேருந்து நிலையத்தினுடைய அவசியத்தை அறிந்து கொண்ட காரணத்தினாலே தான் 3—7—1989 தேதி அன்று அரசு அதிகாரிகளுடன் நேரடியாக அந்த இடம் பார்வையிடப்பட்டது. அதற்குப் பின்னாலே சுமார் 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வருவாய்த்துறையினிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆர்ஜிதம் சம்பந்தமாக மாதவரம் பேரூராட்சி மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவில் ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவடைந்ததற்குப் பிறகு பேருந்து நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. டி. கே. பழனிச்சாமி ; தலைவர் அவர்களே, நன்றி. வணக்கம்.

திரு. செங்கை சிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்வது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பல்வேறு துறைகளைச் சார்ந்த நிலம் ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதிலே விலை நிர்ணயம் செய்வதில்......(மணியடிக்கப்பெற்றது).

சைதை தொகுதியில் அறநிலையத் துறையின் கண்காணிப்பில் உள்ள திருக்கோயில்கள்

*2189—திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் ; மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;—

சைதை தொகுதியில் அறநிலையத் துறையின் கண்காணிப்பில் உள்ள திருக்கோயில்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. டீ. பி. கந்தசாமி ; தலைவர் அவர்களே, சைதை தொகுதியில் அறநிலையத் துறையின் கண்காணிப்பில் மொத்தம் 39 திருக்கோயில்கள் உள்ளன.

9.55 மணி

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பெரும் பகுதியாக இருக்கின்ற கோயில்கள் இன்றைக்கு பாழடைந்து இருக்கின்றன. உதாரணமாக

1990 சனவரி 22]

ஆதிகேசவப் பெருமாள் கோயில் மிகவும் சீர்கெட்டு இருக்கிறது. அதைத் திருத்தியமைக்கின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். அதைப் போலவே, கழகத் தலைவருடைய காலத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் கேள்விக்கு அமைச்சருடைய விடை எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்கின்ற அந்தக் கோயிலைப் பற்றிய விவரம் அறநிலையத் துறையினிடத்திலே இல்லை. அதுபற்றிய விவரத்தை என்னிடத்திலே தந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்; அதைப்போலவே, ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தானம் என்பது கோட்டூரிலே இருக்கிறது. பிரபல தொழிலதிபரும், சென்னை மாலை முரசினுடைய பத்திரிகையாளருமான அவர்கள் முன் வந்து, அங்கே கலைஞருடைய பெயராலே திருமண மண்டபம் கட்டித் தர இருக்கிறார்கள். அதில் ஒரு பகுதி அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். மீதிப் பகுதியை நமது அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி; அவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பணிகளில் மொத்த மதிப்பீடு என்ன, நன்கொடையாளர்கள் எவ்வளவு தருகின்றார்கள் என்பதைப் பொறுத்து நிச்சயமாக அறநிலையத் துறையும் அதிலே பங்கு கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காளியம்மன் கோயில் திருப்பணி.

*5787—திரு. எம். சேட்டு: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை--சம்புவராயர் மாவட்டம், செங்கம் அருள்மிகு வேணுகோபால பார்த்தசாரதிப் பெருமாள் வகையறா திருக்கோயில்களில் ஒன்றான காளியம்மன் கோயில் திருப்பணி நிறைவு பெறாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?